# ★ 90-ம் ஆண்டு கைதான 400 தமிழர் பற்றி தகவலில்லை!

-2-1-1995
22-12-1994

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 18 இதழ் 332
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-1-1995

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு பாண்டிருப்பு யாழ்ந்தியில் 1990ம் ஆண்டு படையினரால் கைதுசெய்யப்பட்ட 400 தமிழர் பற்றி எது வித தவலுமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமான 1990ம் ஆண்டு யூன் மாதம் 22ம் திகதி பாண்டிருப்பு பகுதியை சுற்றி வளைத்த படையினர் 400க்கும் மேற்பட்ட இளவயதினரையும் குடும்பத்தவரையும் கைதுசெய்து கொண்டு சென் (4-ம் பக்கம் பார்க்க)

## மகவலின் சிறையில் சார்ஜன் சுட்டுக்கொலை

(கொழும்பு)
மகஸின் சிறைச்சாலையில் பொலிஸ் 'சார்ஜன்ட் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.
கடந்த 28-ம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவரைச் சுட்டுக் கொன்றுள்ளார்.
மேலதிகாரியைக் சுட்டுக் கொன்ற கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. -சி

# ★ அரசு - புலிகளுக்கிடையில் அடுத்த ஓரிரு தினங்களில் பேச்சுக்கள் நடைபெறுமாம்!

## ஜெனரல் ஹமில்டன் தகவல்

[கொழும்பு]
அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்டச் சமாதானப் பேச்சுக்கள். அடுத்த ஓரிரு தினங்களில் மீண்டும் ஆரம்பமாகும் என பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கூறியதாக பி. பி. ஸி. தெரிவித்தது. [4ம் பக்கம் பார்க்க]

## இராணுவ அதிகாரியும் பேச்சில் பங்குபற்றுவார்

(கொழும்பு)
அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான அடுத்த கட்டப் பேச்சில் இராணுவ அதிகாரி ஒருவரும் கலந்து கொள்ளுவார் என பாதுகாப்பு ,அமைச்சின் செயலர் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.
போர் நிறுத்தத்திற்கு உதவும் வகையில் இந்த இரா (4ம் பக்கம் பார்க்க)

## அரச பிரதிநிதிகளின் பெயர்கள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடனான அடுத்த கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அரச பிரதி நிதிகளின் பெயர்கள் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. பழைய குழுவினரா அல்லது புதியவர்களா என் பது குறித்தோ இக்குழு (4ம் பக்கம் பார்க்க)

## சமாதானம் ஏற்படுவதை ஐ.தே.க. விரும்புகிறது

(கொழும்பு)
இந்த நாட்டில் சமாதானம் ஏற்படுவதே எமது விருப்பமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் காமினி அத்துக் கொரளை பி. பி சி, 'சந்தேசியவுக்கு' தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட்டு மக்கள் கஷ்டங்கள் எதுவுமின்றி இருக்கவேண்டும் இதுதான் எமது பிரார்த்தனையாகும்.
1994-ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அடைந்தது ஒரு தற்காலிகமான தோல்வியே., தற்பொழுது புதிய தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கிய தேசியக்கட்சியை கட்டியெழுப்பி இருக்கிறோம்'' என்றார். (ம - சி)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(உடுவில்)
1995ஆம் ஆண்டு முதலாம் தவணைக்காக அரசாங்க பாடசாலைகள் அனைத்தும் ஏன்று ஜனவரி 02ஆம் திகதி ஆரம்பமாகின்றன. (109)

## கரவை கந்தசாமி நேற்று கொழும்பில் சுட்டுக்கொலை

### மகளும் படுகாயம்

(கொழும்பு)
ஜனநாயகமக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) உபதலைவர் கரவை கந்தசாமி நேற்று முன்தினம் கொழும்பு தெகிவளையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து இனம் தெரியாத இளைஞர்களினால் சுட்டுக் சொல்லப்பட்டார்.
இச்சம்பவத்தின்போது இவரது மகள் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார்.
கைக்குண்டு சகிதம் இவரது தெகிவளை இல்லத்திற்கு நேற்று முன்தினம் சென்ற இளைஞர்கள் கைக்குண்டினை, வீசி கந்தசாமியை நோக்கி (4ம் பக்கம் பார்க்க)

★ தஞ்சாவூரில்

## உலக தமிழ் மாநாடு நேற்று ஆரம்பம்

(சென்னை)
8-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சையில் நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது.
நேற்று காலை ஆரம்பமாகிய இந்நிகழ்வில் பேரரசன் இராஜ ராஜசோழன் சிலையை மலேசிய அமைச்சர் டத்தோ (4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்று தமிழர்கள் கைது

(கொழும்பு)
புளொட் அமைப்பைச் சேர்ந்த கரவை கந்தசாமியின் கொலையைத் தொடர்ந்து கொழும்பில் நேற்று தமிழ் இளைஞர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனரரம். (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக எதிரணிகள் பகிஷ்கரிப்பு

(சென்னை)
தஞ்சையில் நேற்று ஆரம்பமான 8-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை தமிழக முக்கிய எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்துள்ளன.
அ. தி: மு. கவினதும் முதல்வர் ஜெயலலிதாவினதும் தனிப்பட்ட மாநாடு என கண்டனம் தெரிவித்துள்ள எதிர்க்கட்சிகள் உலகத் தமிழ் (4ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு காவலரண் மீது புலிகள் அதிரடி 2 ராணுவம் பலி

### சடலம், ஆயுதம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு இராணுவ நிலைகள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர். பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.
நேற்று அதிகாலை 2-15மணியளவில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட இத்துணிகரத் தாக்குதலின்போது, இராணுவ நிலைகளில் நிலைகொண் [4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

காங்கேசன்துறை வீதியில் இருக்கும் சரஸ்வதி பவான் உணவகத்தின் முன்பாக பிளாஸ்ரிக் நார்பை ஒன்று முக்கிய ஆவணங்களுடன் கடந்த வியாழன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சரஸ்வதி பவான் உணவகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-1356)

### விற்பனைக்கு

வர்த்தகப் பெருமக்கள், அன்பளிப்புச் செய்ய விரும்புவோருக்கு மலிவு விலையில் டயறி கிடைக்கும். விலை ரூபா 65/- ஆனந்தா அச்சகம், காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம். (சி- 1357)

### 1995 புத்தாண்டுப் பலாபலன்கள்

3-1-95 முதல் செவ்வாய் வக்கிரமும், எல்லா இராசிப் பலன்களும் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றன. நூலாசிரியர்:- சத்யா. பாடசாலை உபகரணங்களுக்கு: புத்தகசாலை சுரேகா, யாழ்ப்பாணம். (சி-1358)

### புத்தாண்டு திருப்பலி

(அரியாலை)

யாழ். கத்தோலிக்க தேவாலயங்களில் நேற்று புத்தாண்டு திருப்பலி சிறப்பாக நடைபெற்றது. யாழ். புனித மரியாள் பேராலயத்தில் யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையிலும் யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் பங்குத் தந்தை அருட்திரு. ஜே. நீக்கிலஸ் அடிகள் தலைமையிலும் புத்தாண்டு திருவிழா திருப்பலி நடைபெற்றது. - 59

### திருவிழா

(அரியாலை)

யாழ். குருநகர் கடற்கரை வீதி புனித, செபஸ்தியார் வருடாந்த திருவிழா எதிர்வரும் 20-ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். பேராலய பங்குத் தந்தை தலைமையில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. -59

### பூச்சட்டி திருட்டு

(அரியாலை)

யாழ். இராசாவின் தோட்டம் அசெம்பிளி ஒவ் கோட் (தேவ சபை) ஆலயத்தில் கடந்த வாரம் ஆலய முன் பக்கமுள்ள பலவித வர்ணப் பூக்கள் கொண்ட பூச்சட்டிகள் திருட்டுப்போயுள்ளதாகத் தெரிய வருகின்றது. -39

### அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 5ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

### மரக்கறி விதைகள் தருவிப்பு

(அரியாலை)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் பேராதனை விவசாயப் பண்ணையிலிருந்து கப்பல் மூலம் கௌபி, கத்தரி, வெண்டி, புடோல், போஞ்சி, பூசணி போன்ற மரக்கறி விதைகளை தருவித்துள்ளது. இதை விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிய வருகின்றது. [59]

### பயிற்சி

(நெல்லியடி)

அவத்தை மூன்றும் பயிற்சியை முடித்த சாரண ஆசிரியர்களுக்கான நான்காம் அவத்தை பயிற்சி இவ்வாரம் நடைபெறவிருக்கின்றது.

இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் மாவட்ட சாரண ஆணையாளர் திரு. கோ. செல்வரட்ணத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்கள்.

### ஆலோசனைக் கூட்டம்

(கொழும்புத்துறை)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் சம்பந்தமான கூட்டம் ஒன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பகுதிக்கான மேற்படி செயல்திட்டம் பற்றிய கூட்டம் எதிர்வரும் 4ம் திகதி புதன்கிழமை காலை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. சு. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். 154

### இறுதி வீரவணக்கமும் நினைவுகல் நாட்டலும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 27ம் திகதி மணலாறு மாவட்டத்தில் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிய கப்டன் ஜீவன் (சின்னத்துரை தங்கேஸ்வரன் - வத்திராயன் வடக்கு தாளையடி) அவர்களின் வித்துடல் கிடைக்காததனுல் இவரது திருவுருவப்படம் அவரது இல்லத்திலிருந்து நேற்று முதலாம் திகதி மதியம் 12 மணியளவில் அணிவகுப்பு மரியாதைகளுடன் வத்திராயன் ச. ச. நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 12.30 மணியளவில் மக்கள் இறுதி வீரவணக்கத்தைத் தொடர்ந்து இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் வடமாராட்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டது.


மாற்றம்

முத்திங்கள் சஞ்சிகை நடாத்தும்

## தேசாபிமானி'94

## விருது வழங்கும் வைபவம்

தலைவர்: பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி]

இடம்: நாவலர் கலாசார மண்டபம் நல்லூர்

காலம்: 0--01--995 திங்கள் (இன்று) பிற்பகல் 3.00 மணி



## கலாநிதி க. கனகராசா

[ஜே. பி] அவர்கள்

1958ம் ஆண்டுமுதல் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், வீதிகள் போன்ற பொது இடங்களில் மரங்கள் நாட்டி

பசுமையின் நண்பன்

என்று பாராட்டப்பட்டவரும், அநாதைகள். அங்கவீனர்களுக்கு வாரிவழங்கி கொடைவள்ளலாகவும் திகழும்

கலாநிதி க. கனகராசா அவர்களுக்கு

தேசாபிமானி விருது

வழங்கப்படுவதை வாழ்த்தி மகிழ்ச்சியடைகிறோம்

## அண்ணா தொழிலகம்

இணுவில்

★ நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கணனிகளின் உதவிகொண்டு அழகான முறையில் அச்சிடப்பட்ட ''மாற்றம்'' 2-ம் ஆண்டு சிறப்பிதழ் இவ்விழாவில் வெளியிடப்படும்.

விலை ரூபா 15/- மட்டுமே

[சி 4639]


## வெடெக்ஸ் கொள்ளை: மற்றொருசந்தேக நபர் கைது

(கொழும்பு)

'வேடெக்ஸ்' சம்பளப் பணத்தை கொள்ளையடித்தசம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மற்றொரு நபர் பொலிசாரினல் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிசார் இவரை குளியாப்பிட்டியாவில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து இவர் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட போது இவரிடம் 10 லட்சம் ரூபா இருந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இ

## ஒலிபரப்புகூட்டுதாபனத்தில் ஒழுங்கீனம் பற்றி விசாரணை

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஜூலை 1977 தொடக்கம் ஆகஸ்ட் 1994 வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென இரண்டு பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற நியமனங்கள், பதவி உயர்வுகள், அநீதிகள் இடமாற்றங்கள் உட்பட அநீதியான தண்டனைகள் பற்றியும் இந்தக் குழு விசாரணை செய்யும். கேள்விப் பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமை உட்பட வேறு விடயங்கள் பற்றியும் இக்குழு கவனம் செலுத்தும்.

இந்த ஒழுங்கீனங்களை நீக்குவதற்கான சிபாரிசுகளையும் குழு தெரிவிக்கும்.

சட்டத்தரணி எஸ். ஏ. பிரேமரட்ன, எம். டபிள்யூ பிரேமவர்த்தன ஆகியோர் இந்த இரு நபர் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். -கே-சி

## வேதாகம கட்டுரை போட்டியில் பரிசு பெற்றவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் கடந்த புதன்கிழமை பிற்பகல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கட்டுரைப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன,

தேசிய வை. எம். சி. ஏயின் ஆதரவுடன் பாடசாலை மற்றும் திருச்சபைகளுக்கிடையே நடாத்தப்பட்ட வேதாகம கட்டுரைப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றிபெற்றோருக்கும், ஹெல்பேஜ் ஸ்ரீலங்கா நிறுவனத்தினரால் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் பங்கு கொண்டு வெற்றி பெற்றோருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

வேதாகம கட்டுரைப்போட்டியில் பங்குகொண்டு பரிசு பெறுவோர் விபரம் வருமாறு: என்-டி லன் ரட்ணு, பா. கிறிஸ்டீன் அச்சுதன்.

ஹெல்பேஜ் சிறிலங்கா நிறுவனத்தினுல் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பங்குகொண்டு பரிசு பெறுவோர் விபரம் வருமாறு: கனிஷ்ட பிரிவு முதலாமிடம் செல்வி சிவகாமி சண்முகநாதன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் செல்வி மஞ்சுளா நற்குணசிங்கம் (யாழ். இந்துமகளிர் கல்லூரி) சிறப்பு பரிசு பெறுபவர் செல்வி கே. ஷைலஜினி (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி)

சிரேஷ்ட பிரிவு: செல்வி சர்மிளா சண்முகலிங்கம் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), முதலாமிடம்: செல்வி தயாளினி கந்தசாமி (வடமராட்சி இந்துக் கல்லூரி) இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள். 162

### மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை காரைநகரிலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததினுல் மீனவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார், படகும் சேதமடைந்துள்ளது. ம-றி

### இலவச வகுப்பு

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மீசாலை கிழக்கு கிராம அலுவல அலகினுல் 1995ம் ஆண்டு க.பொ.த. (சாத.) மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்பு ஆரம்பமாகவுள்ளது,

இவ் இலவச வகுப்பில் கற்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 06ம் தேதிக்கு முதல் விண்ணப்பப்படிவங்களை மீசாலை கிழக்கு அபி நிர்வாக சபை உறுப்பினர்களின் சிபாரிசுடன் விண்ணப்பிக்குமாறும், மேலதிக விபரங்களை அலகு பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு அலகு செயலாளர் தெரிவித்துள்ளார். 154

### மரக்கறி விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மரக்கறிகளின் விலை இப்பொழுது பெரிதும் வீழ்ச்சி கண்டுள்ளது. கத்தரிக்காய் ஒரு கிலோ 20 ரூபாவாகவும், பயிற்றக்காய் ஒரு கிலோ 25 ரூபாவாகவும் தக்காளி 40 ரூபாவாகவும்வாழைக்காய் ஒரு கிலோ 10 ரூபாவாகவும் பூசனிக்காய் ஒரு கிலோ 20 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

சில நாட்களின் முன் இம்மரக்கறிகள் கூடிய விலைக்கு விற்கப்பட்டன. -162

## மீனின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தற்பொழுது என்றுமில்லாதவாறு மீனின் விலை அதிகரித்துள்ளது. கடல்வலயத் தடைச்சட்டம் அமுலில் இருப்பதால் கடற்றொழிலாளர்கள் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். இதன் காரணமாகவே மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனவிலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 162

### மணிவாக்கு

நல்ல மனிதனை ஏன் பார்க்க முடிவதில்லை யென்றால் அந்த வேடத்தை எல்லோரும் போட்டுக் கொண்டிருப்பதால் தான்.

- வாலே

# நமது நோக்கு

## நினைவுபடுத்தல்

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் பற்றி அரசாங்கத்திற்கு ஐ. தே. க. அவ்வப்போது நினைவு படுத்தும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா செய்தியாளர் கூட்டத்திற்கூறியுள்ளார்.

படுதோல்வியடைந்த ஐ. தே. க உட்பூசல்களாலும் ஆடிப்போயிருக்கிறது. எனவே அக்கட்சியை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு ரணில் மிக நிதானமாகச் செயற்படுகிறார் போலத் தெரிகிறது.

எழுந்தமானக் கண்டனங்களை எடுத்து வீசி அரசியல் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி தற்போதைய நிலையில் மக்களின் வெறுப்பை மேலும் சம்பாதிக்க அவர் விரும்பவில்லை.

எனவே ஆக்க பூர்வமான முறையில் அளந்து பேசும் நிலையில் அவர் செயற்படுகிறார். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி மிக நாசுக்காகக் கூறியுள்ளனர்.

''சொல்வது யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்!'' என வள்ளுவர் ஆழ்ந்து சிந்தித்துக் கூறியது அரசியல்வாதிகள் அறியவேண்டிய அருமையானபாடம்!

தேர்தலிலே வெற்றி பெறுவதற்காக எல்லாக் கட்சிகளுமே வாக்குறுதிகள் பலவற்றை பார்த்துப் பாராமல் அள்ளி வீசின.

தோற்ற கட்சிகளுக்குக் கவலையில்லை ஏனெனில் வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டிய பொறுப்பில்லை.

ஆனால் ஆட்சிக்கு வந்த கட்சி சொல்லிய வண்ணம் செய்யாது விட்டால் மக்களின் வெறுப்பு வளர்ந்து ஆட்சிப் பொறுப்பிலிருந்து விரைவாக விலக வேண்டி வரும்.

எனவேதான் மக்களின் வெறுப்பை ஆட்சியாளர் விரைவாக பெற்றுவிட ரணில் நினைவுபடுத்தும் வேலையில் அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் பாணியில் அரசியல் வியூகம் வகுத்துச் செயற்படுகிறார்,

வாக்குறுதிகளை நிறைவேற்ற நிதி வளமும் மன வளமும் வேண்டும்.

நாட்டைக்கட்டிஎழுப்பி முன்னேற்ற ஜனாதிபதி சந்திரிகாவிற்கு நிதிவளம் போதாதாயினும்நல்லமன வளம் இருக்கிறது எனத்தான் மக்கள் நம்பி வாக்களித்தார்கள்.

கூட இருப்பவர்கள் முட்டுக்கட்டைகள் போட்டு அவரின் மன வளத்தைப் பாதிப்படையச் செய்கிறார்களா?

விரைந்து செயற்பட நினைவூட்டல்கள் வழி வகுக்கவேண்டும்!

# சிறிலங்கா இராணுவத்துக்கு இந்தியாவில் விசேட பயிற்சி

(புதுடில்லி)

சிறிலங்கா படைகளுக்கு இந்தியாவில் விசேட பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவின் முக்கியஸ்தர்களைப் பாதுகாப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவியை சிறிலங்கா அரசு ஏற்கனவே நாடியிருந்தது.

இந்தியாவில் உள்ளது போன்று கறுப்பு பூனை கமாண்டோ பிரிவு ஒன்றை அமைப்பதில் ஆலோசனையும் பயிற்சியும் அளிக்குமாறு சிறிலங்கா அரசு தற்போது இந்தியாவிடம் கேட்டிருப்பதாக புதுடில்லியிலிருந்து செய்திகள் வெளியாகியுள்ளது.

சிறிலங்கா படைகளுக்கு விசேட பயிற்சி வழங்குமாறு சிறிலங்கா பாதுகாப்பு படை கேட்டுக் கொண்டதற்கிணங்க இரு நாடுகளின் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் புதுடில்லியில் சந்தித்து பேசவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது,

ரி

## தபால் விநியோகம்

(அரியாலை)

பருத்தித்துறைக்கு கடந்த 29ம் திகதி வியாழக்கிழமை வந்த மாகோ கப்பலில் இறக்கப்பட்ட 397 தபால் பொதிகளும் அன்றையதினமே யாழ் தபால் நிலையம் கொண்டுவரப்பட்டு தரம் பிரிக்கப்பட்டுள்ளன. கடந்த 30ம் திகதி தொடக்கம் தபால் விநியோகம் நடைபெற்று விருவதாக தெரியவருகின்றது. -59

# கொழும்பிலிருந்து லண்டனுக்கு நேரடி விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

எயார் லங்கா நிறுவனம் கொழும்பிலிருந்து லண்டனுக்கு எதிர்வரும் 7ம் திகதி முதல் நேரடி விமான சேவை ஒன்றை ஆரம்பிக்கிறது.

சனிக்கிழமை தோறும் கொழும்லிருந்து பகல் 1-30க்கு புறப்படும் விமானம் மறுநாள் காலை 8 மணிக்கு லண்டன் போய்ச்சேரும்.

லண்டனிலுள்ள ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்குப் புறப்படும் விமானம் இலங்கை நேரப்படி அதிகாலை 4-40 மணிக்கு கொழும்பு வந்துசேரும்.

இந்த விமானங்கள் வேறு எந்த ஒரு விமான நிலையத்திலும் தரித்து நிற்காது நேரடியாக கொழும்பு லண்டன் சேவையில் ஈடுபடுவதால் இலங்கைவரும் பெருமளவு உல்லாசப் பயணிகள் இந்த சேவையின் மூலம் பயணடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டன் விமான நிலையம் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் செல்வதற்கு ஒரு வசதியான விமான நிலையமாக இருப்பதால் அமெரிக்க விமான சேவை நிறுவனங்களுடன் இணைந்து அமெரிக்கா கனடாவுக்கான விமான சேவைகளை நடாத்தவும் எயார் லங்கா திட்டமிட்டுள்ளது.

லண்டனில் சிறிது நேரம் தரித்துவிட்டு அமெரிக்கா செல்லவும் இந்த திட்டம் உதவிபுரியும் என தெரிவிக்கப்படுகிறது. இ-ரி)

# பலதும் பத்தும்

## எது விபூதி

கன்று போட்டுப் பத்து நாள் கழிந்த பசுவின் சாணத்தை நிலத்தில் விழாமற் பெறவேண்டும்! விபூதிப் பச்சை என்ற செடியின் இலை, நெற்பதர் ஆகியவற்றைச்சேர்த்துஅட்டமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை போன்ற திதிகள் ஒன்றில் வில்லையாகத்தட்ட வேண்டும்,

வெயிலிற்காய்ந்தபின்புடமிட்டு பாலிற்கழுவிக் காய வைக்கவேண்டும். இப்படிப் பெறும்விபூதியில் சாணம், விபூதிப்பச்சை இலை ஆகியவற்றின் மருத்துவக் குணமும் மந்திர சக்தியும் இணைகின்றன.

விபூதி பற்றிய விளக்கம் இந்து சமயப் பேரவை வெளியிட்ட இந்து 'தர்மம்' மார்கழி இதழில் உண்டு. விபூதி எப்படித்தயாரிக்கிறார்கள்? இதனை உரியமுறை முறையில் தயாரிக்கக் கோவில் நிர்வாகிகள் ஏற்ற ஒழுங்கு செய்வார்களா?

—மயூரன்

## இன்று

[யாழ்ப்பாணம்]

மாற்றம் முத்திங்கள் சஞ்சிகை நடத்தும் தேசாபிமானி விருது வழங்கும் வைபவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும்.

மில்க்வைற் தொழில் அதிபர் திரு. க. கனகராசாவுக்கு இத் தேசாபிமானி விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. 162-ரி

# தமிழீழத்தில் பிரான்ஸ் மாதிரிக் கிராமம்

[பாரிஸ்]

தமிழீழத்தில் பிரான்ஸ் மாதிரிக் கிராமம் ஒன்று நிறுவும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழர் புனர் வாழ்வுக் கழகதின் பிரான்ஸ் கிளை இந்த திட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.

இந்த மாதிரிக் கிராமத்தில் 50 வீடுகள், 50 மலசல கூடங்கள், 10 கிணறுகள், பாடசாலை, மருத்துவமனை, நூல் நிலையம், பயிர்ச்செய்கை, கால் நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சுயதொழில், சிறுவர் பூங்கா, விளையாட்டுத் திடல் போன்றவையும் நிறுவப்படவுள்ளது.

இக்கிராமத்தின் செயற்பாடுகளை அவதானித்து நடைமுறைப்படுத்த மாதிரிக் கிராம மக்களை உள்ளடக்கி நிர்வாகம் ஒன்று அமைக்கப்படும்.

இத்திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழக தலைமைச் செயலகம் மேற்பார்வை செய்யும்.

இத்திட்டம் தொடர்பான செயற்குழு ஒன்று அண்மையில் பாரிஸில் இடம் பெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டது.

இக்கூட்டம் தமிழர் புனர் வாழ்வு கழக பிரான்ஸ் கிளை பொறுப்பாளர் திரு. கு. குகன் தலைமையில் நடைபெற்றது: ரி

# இராசி பலன்

02-01-1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு மார்கழி 18)

பிரதமை மாலை 3-17வரை; பூராடம் காலை 10-07 வரை, சித்தயோகம் இராகுகாலம் காலை 7-40 முதல் 9-04 வரை சுபவேளை. மாலை 3.24 முதல் 5-11 வரை.

மேடம்- வாய்த் தர்க்கம், வசதிக்குறைவு, புத்திரர் கவலை

இடபம்- வாக்குப் பலிதம், தொழில் சிறப்பு, விவேகம்.

மிதுனம்- புதிய அனுகூலம், பணவரவு, சகோதர நினைவு

கடகம்- வீண் கற்பனை, மனப்பதற்றம், அலைச்சல்

சிங்கம்- புரியாத புதிர், குடும்ப வேற்றுமை, பேச்சு வார்த்தை

கன்னி- மனக்களிப்பு, அதிகாரிகள் பாராட்டு, தான தர்மம்

துலாம்- துணிகரச் செயல், நண்பர் சகாயம், கல்வியில் சிறப்பு

விருச்சிகம்- வயோதிபர் கோபம், பணமுடை, மனச் சுமை

தனுசு- தடுமாற்றம், குடும்பத் தகராறு, சயனசுகக் குறைவு

மகரம்- நற்செய்தி. குடும்ப சுகம், விருந்தோம்பல்

கும்பம். நோய் தணிவு, பணியாள் சகாயம், நல்வாக்கு

மீனம். தவறான போக்கு, கடன் சுமை, அகங்காரம்-

ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-01-02 திங்கள்

இரவு

08-01 இசையரங்கம் நிகழ்ச்சியில் இசையமைப்பாளர் திரு. எம். கண்ணன் அவர்களின் ''சாஹி பாஜா''வாத்தியக் கச்சேரி இடம் பெறும்.
08-30 செய்திகள்
08-40 நாடகம் வானொலி 4ல் முதலாவது பரிச பெற்ற ந. லோகேஸ்வரி எழுதிய ''எல்லை''
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1995-01-03 செவ்வாய்

காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995 01—02 திங்கள்

மாலை ஒலிபரப்பு

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டு செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

கடந்த வருடம்

# வடமராட்சியில்2,69,075பேர் சிகிச்சை பெற்றனர்

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள அரசினர் வைத்திய சாலைகளில் 1994ம் வருடம் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரை சுமார் இரண்டு லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து எழுபத்தைந்து நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் நாற்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டு நோயாளர்காய்ச்சலினாலும் முப்பத்திநாலாயிரத்து முன்னூற்று தொண்ணூற்றைந்து நோயாளர் இரத்தப் பரிசோதனைக்கும் ஆளாகியுள்ளனர்.

இதேவேளை பதின்நான்காயிரத்து அறுபத்தொரு நோயாளர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருந்தனரென்றும், இவர்களில் 494 நோயாளிகள் மட்டும் மூளை மலேரியாவுக்கு இலக்கானர்களென்றும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையின் சுகாதார பிரிவினர் தெரிவித்தனா. -160

# பசுந்தாழ் பசளை மிகவும் உகந்தது

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தின்பயிர்ச் செய்கைக்கு பசுந்தாழ்ப்பசளை மிகவும் உகந்தது என திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

பூவரசம்இலை, கிழுவங்குழை. சணல் என்பனவற்றை நிலத்தில் தாழ்ப்பதன் மூலம் இப்பசளை உருவாகின்றது. இப்பசளை மூலம் அதிக விளைச்சல் கிடைப்பதாக யாழ். விவசாய திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்து மக்கள் புகையிலைச் செய்கைக்கு இப்பசளையைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

(71)

நீர்வளம் பெருக்கி நிறைவினைப் பெறுவோம்

## கொழும்பில் நேற்று

# பட்டாசு வெடி விபத்தினால் ரூபா 50 லட்சம் வரை சேதம்

[கொழும்பு]

கொழும்பு நகரில் புத்தாண்டுத் தினமான நேற்று வெடி கொளுத்தியதனால் ஏற்பட்ட தீ விபத்தில், 50 லட்சம் ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

பல வர்த்தக நிலையங்கள் இத்தீவிபத்தினால் முற்றாகச் சேதமடைந்துள்ளதாக வர்த்தகப் பொறுப்பாளர்கள் முறையிட்டுள்ளனர்.

இத்தீவிபத்தினால் துணிக்கடை ஒன்று எரிந்து நாசமாகியுள்ளதாகவும் மற்றும் வாணவெடி ஒன்று வீழ்ந்ததில் கடை ஒன்று சேதமடைந்தது என்றும் கடை உரிமையாளர்கள் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

நேற்றுக் கொழும்பு நகரில் மட்டும் 6 தீவிபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தீயணைக்கு படையினர் தெரிவித்துள்ளனர்.

பாலத்துறை, புறக்கோட்டை கொம்பனித்தெரு போன்ற பகுதிகளிலேயே இத்தீவிபத்து பெருமளவில் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. க-சி

## கடந்த இரு வருடத்தில்

# ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு ரூபா 1,800 கோடி வரிவிலக்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கடைசி இரண்டு வருட ஆட்சியில் கட்சி உறுப்பினர்களுக்கும், அவர்களின் ஆதரவாளர்களுக்கும் 1.800 கோடி ரூபா பெறுமதியான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது என்று 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த 1800 கோடி ரூபாவுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் வாகனங்கள், உடுபிடவைகள் என்று பல பொருட்கள் அடங்கியுள்ளன.

சுங்கவரிச் சட்டத்தின் 19ம் பிரிவின்படி நிதியமைச்சர் வரிவிலக்களிப்பது நாட்டுக்கு அத்தியாவசியமான பொருட்கள் இறக்குமதி செய்யும் நேரங்களில் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (ம-சி)

# சமாதானம் மலர சந்திரிகா 'வாழ்த்து

(கொழும்பு)

பொதுமக்களின் மகத்தான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் திடசங்கற்பத்துடன் நாங்கள் இந்தப் புத்தாண்டை வரவேற்கின்றோம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, புத்தாண்டை வரவேற்று மாலைதீவிலிருந்து விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: இந்தப் புத்தாண்டில், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும் பொருட்டு எமது அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவற்றுக்கும் இலங்கை வாழ் மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை அன்புடன் வேண்டுகின்றேன்.

உதயமாகும் இந்தப் புத்தாண்டின்போது இலங்கை மக்களுக்குக் கூடிய விரைவில் சமாதானமும், சுபீட்சமும் மலரவேண்டுமென மனமார வாழ்த்துகிறேன். ம-சி

# பிரிகேடியர் லியனகே பிணையில் விடுதலை

[கொழும்பு)

எம்பிலிப்பிட்டியாவில் 31 பாடசாலை மாணவர்கள் காணாமற் போனது சம்பந்தமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரிகேடியர் ஹரி லியனகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர் தற்பொழுது இராணுவத்தின் 13 வதுபடையணியின் ஆணையிடும் அதிகாரியாக கடமை புரிகின்றார்.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சில இராணுவ அதிகாரிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ம - சி)

# டி. பி. வீட்டு மின்சார திருத்த வேலைக்கு ரூபா 15 லட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு அரசு வழங்கியவீட்டின் மின்சாரத்திருத்த வேலைகளுக்கு அரசாங்கம் 15 லட்சம் ரூபாவைச் செலவிடவுள்ளது.

டி. பி. விஜேதுங்கவின் மனைவி கேட்டுக்கொண்டதற்கிணங்கவே, அரசாங்கம் திருத்த வேலைகளை மேற்கொள்ள உள்ளதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

திரு. விஜேதுங்கவுக்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு ஒன்றைப் புதிய அரசு வழங்கியுள்ளதும் தெரிந்ததே. ம-சி

# சகோதரிகள் தகராறு கத்திவெட்டில் முடிந்தது

[ஆனைப்பந்தி]

உடன்பிறந்த சகோதரிகளுக்கிடையில் எழுந்த காணித் தகராறு கத்திவெட்டில் முடிந்ததனால் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் குடமியன் - வரணிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இ. யோகமணி (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தமக்கையாருடன் காணிப் பிரச்சனை தொடர்பாக வாக்குவாதப்பட்டுக்கொண்டிருந்த போது தமக்கையின் மகள் கத்தியினால் தலையில் வெட்டியதாகவும் இதனால் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையிலும் பின் யாழ். போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். [101-சி]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-

## விபத்தில் சிறுமி படுகாயம்

(ஆனைப்பந்தி)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சிறுமியை, கார் மோதியதால் அந்தச் சிறுமி படுகாயம் அடைந்தார்.

நேற்று 1ம் திகதி பிற்பகல் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் இடம்பெற்ற இவ்விபத்தில், மணல்தறை ஒழுங்கையில் வசிக்கும் செ. சுதர்சினி (வயது 13) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது சைக்கிளும் மோதிய காரும் பலத்த சேதமடைந்துள்ளன. 101-சி

### மண்டைதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த படையினர், தாக்குதலைச் சமாளிக்கமுடியாது நிலை குலைந்து பின்வாங்கினர்.

இத்தாக்குதலில் உயிரிழந்த சிப்பாய் ஒருவரின் சடலமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட படையினரின் ஆயுதங்கள் வருமாறு:

43 மில்லிமீற்றர் சிங்கப்பூர் டெங்கான்-01, அதற்குரிய எறிகணை-01, ரி 56 பட் மொடல் துப்பாக்கி-01, நடுத்தர ரவைகள்-90, ரவைக்கூடு தாங்கி அணி-01 ஆகியவையாகும்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை. க-சி

### தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டை தமிழக அரசு தனது சுயலாபத்திற்காக பயன்படுத்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

இதே வேளை தஞ்சை மாநாட்டையொட்டி தஞ்சாவூரில் பெருமளவு பாதுகாப்பு போடப்பட்டிருப்பதுடன் சந்தேகத்திற்கிடமான பலர் கைது செய்யப்பட்டுமுள்ளனராம். (சி)

### இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ அதிகாரி அரசு குழுவில் இடம்பெறுவதாகவும் ஹமில்டன் தெரிவித்தார்,

மேலும் யாழ். குடாநாட்டிற்கான போக்குவரத்துப் பாதை திறப்பது குறித்தும் இந்த இராணுவ அதிகாரி 2-ம் கட்டப்பேச்சில் தமது பங்களிப்பை செலுத்துவாரா எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த இராணுவ அதிகாரியின் பெயர் இதுவரை உத்தியோக பூர்வாமாக அறிவிக்கப்படவில்லை. (சி-க)

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெகிவளையில் இச்சம்பவம் இடம் இடம்பெற்றதால் அப்பகுதி நேற்று படையினரின் தேடுதல் வேட்டைக்கு இலகானதும் இங்கிருந்த பலர் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவரது கொலை குறித்து இதுவரை யார் மீதும் குற்றம் சுமத்தாத பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (சி)

### அரச பிரதிநிதிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வின் தலைவர் யார் என்பது குறித்தோ அரசு இதுவரை எதுவும் அறிவிக்காததால் பல ஊகங்கள் நிலவுவதாக செய்திகள் கூறுகின்றன.

இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் எனவிடுதலைப்புலிகளுக்குபிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை கடிதம் அனுப்பியிருந்த போதும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹமில்டனின் பி. பி. ஸி. பேட்டிப்படி பேச்சுக்கள் இன்று நடைபெறமாட்டாதென தெரிய வருகிறது. எனினும் இப்பேச்சுக்கள் பற்றிய அரசின் உத்தியோகபூர்வமான அறிவிப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### தஞ்சாவூரில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சாமிவேல் திறந்து வைத்தார்.

தொடர்ந்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழ் இலக்கிய சோலை என்ற திரைப்படத்தையும் 62 அரிய பெரிய தமிழ் நூல்களையும் வெளியிட்டு வைத்தார். தமிழுக்காக உயிர் நீத்த தியாகிகள் 12 பேரின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா உதவித் தொகை முதலமைச்சரினால் வழங்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற பிரமாண்டமான பேரணியில் தமிழர், கலை பண்பாடு ஆகியவற்றை சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளும் கும்மி, கோலாட்டம், மற்றும் வீர விளையாட்டுக்களும் இடம் பெற்றன.

இவ்வூர்வலத்தை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இலங்கை அமைச்சர் எஸ். தொண்டமான், மலேசிய அமைச்சர், டத்தோ சாமிவேலு மற்றும் மொறிஷியஸ் அமைச்சர் ஆறுமுகம் பரசுராமன் உட்பட பலர் பார்வையிட்டனர்.

இந்திய உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் மாநாட்டை நேற்று மாலை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்தார்.

விழா தொடர்பான மலர் ஒன்றையும் உபஜனாதிபதி வெளியிட்டார். தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா மாநாட்டை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். (க-சி)

### 90 ம் ஆண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றனர்.

எனினும் நான்கு வருடமாகியும் இவர்கள் எவருமே இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. இவர்களை விடுதலை செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சுக்கும் மற்றும் ஆணைக்குழுக்களுக்கும் மக்கள் பல கோரிக்கைகளை விடுத்த போதும் எதுவித பயனும் கிடைக்கவில்லை.

தற்போது இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா அல்லது படுகொலை செய்யப்பட்டுவிட்டார்களா என்பது குறித்து எதுவும் தெரியவில்லை என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (சி)

### கரவை கந்தசாமி

1ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கியால் சுட்டனர். இதனால் அவர் ஸ்தலத்திலே துடிதுடித்துப் பலியானார். அவரது மகள் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

திரு. கரவை கந்தசாமி 1989-ம் ஆண்டின் பின் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில் (புளொட்) இணைந்தார். அதன் பின்னர் உருவாக்கப்பட்ட இக்கழகத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் இவர் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி-ரீ)

### அரசு-புலிகளுக்கிடையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி பி. பி. ஸி. மேலும் கூறுகையில், சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள இருக்கும் அரச பிரதிநிதிகள் குழு, அடுத்த சில நாட்களில் யாழ்ப்பாணம் செல்லுமென இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறினார். போர் நிறுத்தம் குறித்து இப்பேச்சில் முக்கியமாக ஆராயப்படும்.

பல வாரங்களாக மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசு முயன்று வருகிறது. யாழ்ப்பாணத்திற்கும், கொழும்புக்குமிடையே பல கடிதங்கள் பரிமாறப்பட்டுள்ளன. ஆனால் பல பிரச்னைகள் இதில் எழுந்தன. இந்தப் பேச்சுக்கள் முக்கியமான பிரச்னைகளைத் தீர்க்கும் விதத்தில் செல்லவேண்டும். அதாவது இந்த உள்நாட்டுப் போருக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியதாக அது இருக்கவேண்டும் எனப் புலிகளிடம் இருந்து திடமான உறுதிமொழி வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா கேட்டிருந்தகர்.

முதல் கட்டப் பேச்சுக்கள் குறிப்பாக பரஸ்பரநம்பிக்கையூட்டும் முயற்சியாக மட்டுமே இருந்தன. குறிப்பாக யாழ். குடாவில் புனரமைப்பு வேலைகள் செய்யப்படவேண்டும் என்பதே அவை. அதற்காக 60 மில்லியன் டாலர் தொகை ஒதுக்கப்பட்டதாக அரசு அதிகாரிகள் கூறுகிறார்கள். போர் நிறுத்த உடன்பாடு கண்ட பின், இப்பணம் மேற்படி பணிகளுக்குச் செலவிடப்படும்

இந்த வாரம் மீண்டும் பேச்சுக்கள் நடைபெறும்போது, யுத்த நிறுத்தம் பற்றி ஆராயப்படும். அதிகாரபூர்வமான குழு ஒன்று இன்னும் ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணம் செல்லும் என்றும் தெரிவித்தது. (சி-க)